லுனகம்வெஹெர பிரதேச சபை - 2024

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

லுனுகம்வெஹெர பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உபபிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, லுனுகம்வெஹெர பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் மாநகர சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, இந்த அறிக்கையின் 1.6 பந்தி 1.6.2 (இ) அவதானிப்புக்கள் தவிர முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சபையின் முன்பள்ளி விளையாட்டு முற்றத்தின் உபகரணங்கள் பொருத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 496,780 தொகை சரியாக தளபாடங்கள் மற்றும் உபகரணங்களின் கீழும், பிழையான முறையில் காணி கட்டிடங்களின் கீழும் இரண்டு தடவைகள் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	2025 ஆண்டு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும் என.	இரட்டை கணிப்பு வழு ஏற்படாதவாறு சரியாக வகைப்படுத்தி உபகரணங்கள் மற்றும் பொருத்துக்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(ஆ)	04 மூலதன செலவு விடயங்களை மூலதனப்படுத்தும் போது அதனுடன் தொடர்புள்ள செலவுகளின் கூட்டுத்தொகை ரூபா 1.11 மில்லியன் தொகையினை உட்படுத்தியிருக்கவில்லை.	2025 ஆண்டு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும் என.	கொள்வனவு செய்யப்படுகின்ற நடைமுறையல்லாத சொத்துக்களின் சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(இ)	2021 ஆண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிதியக் கணக்கு மீதி ரூபா 411,213 தொகை மிகையாக காட்டப்பட்டு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்ததுடன், அதனை மீளாய்வாண்டின் போதும் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	2025 ஆண்டு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும் என.	திரண்ட நிதிய மீதிகளில் வித்தியாசத்திற்கான காரணம் கண்டறிந்து நிதிக்கூற்றக்களில் சீராக்கல் செய்யப்பட வேண்டும்.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

	சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 571	02 வருடங்களை மிகைத்துள்ள ரூபா 98,000 இற்கான பாதுகாப்பு பிணை வைப்புக்களின் 04 மீதிகளை வருமானத்திற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	எதிர்காலத்தில் சபையின் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	குறிப்பிட்ட நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் 02 வருடங்களை மிகைத்துள்ள பொருத்தமான வைப்பு மீதிகளை வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஆ)	2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 இலக்கங் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் பந்தி 3.1	சபைக்கு சொந்தமான செயற்படு நிலைமையில் காணப்பட்ட 10 வாகனங்களின் எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொண்டிருக்கவில்லை.	அனைத்து வாகனங்களினதும் எரிபொருள் எரிவுப் பரிசோதனை விரைவாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	சுற்றறிக்கையின் குறிப்பிட்ட பிரிவின் பிரகாரம் வாகனங்களின் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ள வேண்டும்.
(இ)	2018 மார்ச் 19 திகதிய 01/2018 இலக்கங் கொண்ட திறைசேரிச் செயலாளரின் சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை	ஓட்ட நிலையிலிருந்து அகற்றப்பட்டிருந்த சபைக்கு சொந்தமான 04 வாகனங்களை அப்புறப்படுத்துவதற்கு அல்லது திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	02 நீர் பவுசர்கள் மற்றும் கெப் வண்டி அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என.	செயற்படு நிலையில் காணப்படாத வாகனங்கள் தொடர்பாக குறிப்பிட்ட சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஈ)	2010 திசெம்பர் 27 ஆந் திகதிய தபபா/பபாகொ/2010/01 இலக்கங் கொண்ட தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை	சபைக்கு சொந்தமான 04 வர்த்தக தொடர் கட்டிடங்களில், 31 கடையறைகளுக்காக புதிய பெறுமதி மதிப்பீடொன்று பெற்றுக் கொள்ளாமல் பழைய பெறுமதி மதிப்பீட்டின் அடிப்படையில் 2024 மற்றும் 2025 ஆண்டுகளின் போது வாடகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.	22 கடையறைகளுக்காக புதிய பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையின் படி வாடகை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது எனவும் மீதியான 09 கடையறைகளுக்குரிய பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை கிடைத்திருக்கவில்லை என	குறிப்பிட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான கடையறைகள் காலரீதியாக பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு வாடகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த செலவு ரூபா 695,658 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த செலவு ரூபா 3.82 மில்லியன் தொகையாக இருந்தது.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபைச் செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

	2024				2023			
வருமான மூலம்	மதிப்பீட்டு வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை	மதிப்பீட்டு வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
வீதவரி மற்றும் வரி	850,000	875,100	928,577	73,683	1,054,000	709,120	736,720	127,160
வாடகை	11,160,300	5,801,969	6,081,415	492,568	8,971,000	4,004,296	4,618,578	772,014
அனுமதிப் பத்திரக் கட்டணம்	2,500,600	1,889,605	2,572,695	180,400	1,685,700	1,833,050	2,364,900	863,490
ஏனைய வருமானங்கள்	10,948,800	2,507,635	2,421,088	300,892	3,686,500	1,239,604	1,653,867	214,345
மொத்தம்	**25,459,700**	**11,074,309**	**12,003,775**	**1,047,543**	**15,397,200**	**7,786,070**	**9,374,065**	**1,977,009**

2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டு ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு அனைத்து வருமான மூலங்களின் மொத்த நிலுவை வருமானம் ரூபா 1.98 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், ஆண்டிற்கான ரூபா 11.07 மில்லியன் தொகை காணப்பட்டது. அதன் படி ஆண்டின் போது சேகரிக்கப்பட வேண்டிய ஒட்டுமொத்த வருமானம் ரூபா 13.05 மில்லியன் தொகை காணப்பட்டதுடன், பதிவழிக்கப்பட்ட மற்றும் சேகரிக்கபட்ட வருமானம் ரூபா 12 மில்லியன்களாகும். அவை ஒட்டுமொத்த வருமானத்தில் 92 சதவீதத்தை கொண்டிருந்தது.	2025 ஆண்டின் போது நிலுவை வருமானத்தை விரைவாக சேகரித்துக் கொள்வதற்கு மற்றும் அறவீடு செய்ய முடியாத வருமானத்திற்காக நீதிமன்ற செய்முறைகள் கடைபிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	நிலுவை வருமானம் விரைவாக சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2.2.3 அறிவித்தல் பலகைக் கட்டணங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
2023 நவம்பர் 03 திகதிய 2357 இலக்கங் கொண்ட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் அறிவித்தல் பலகை காட்சிப்படுத்துதல் தொடர்பாக கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்காக சபையின் அதிகாரப் பிரதேசத்தில் மத்தளை வீதி மற்றும் புதியநகர் அண்டிய பாதைகளில் மாத்திரம் காட்சிப்படுத்தப்பட்டிருந்த 35 அறிவித்தல் பலகைகளுக்காக ரூபா 255,500 இற்கான கட்டணம் ஒன்று அறவீடு செய்திருக்காததுடன் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை அறிவித்தல் பலகைக் கட்டணம் ரூபா 180,400 தொகை அறவீடு செய்திருக்கவில்லை.	2024 திசெம்பர் மாதம் இறுதியில் காட்சிப்படுத்தப்பட்டது என உறுதிப்படுத்தப்பட்டமையால் 2025 ஆண்டில் அறவீடு செய்யப்பட வேண்டிய வருமானம் என அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என.	அறிவித்தல் பலகை காட்டிப்படுத்துவதற்கு முன்னர் கட்டணம் அறவீடு செய்யப்பட வேண்டும்.

2.2.4 முத்திரைக் கட்டணம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 5.80 மில்லியன் தொகை காணப்பட்டதுடன் பெற வேண்டிய முத்திரைக் கட்டண மீதியில் 2023 ஆண்டிற்குரிய பெற வேண்டிய மீதி ரூபா 2.24 மில்லியன் தொகை காணப்பட்டது.	2003 ஆண்டு நிலுவைத் தொகையில் ரூபா 2 மில்லியன் தொகை அறவீடு செய்யப்பட்டது.	நிலுவை வருமானம் விரைவாக தருவித்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள பாதைகளின் திருத்த வேலைகள் மற்றும் பல்வேறு ஆபத்து இடர் நிலைமைகள் தொடர்பாக மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த 23 பொதுமக்கள் முறைப்பாடுகள் மற்றும் 2023 ஆண்டு நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களில் 12 முறைப்பாடுகள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. வீதிவிளக்குகள் திருத்த வேலைகள் தொடர்பாக கிடைத்திருந்த பொதுமக்கள் முறைப்பாட்டு பதிவேட்டின் படி நடவடிக்கை எடுத்திருக்காத 21 முறைப்பாடுகளுக்காக அதன் காலதாமதம் 09 நாட்கள் முதல் 74 நாட்கள் வரையான வீச்சில் காணப்பட்டது. இதன்படி பொதுமக்களுக்கு நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகள் நிறைவேற்றலின் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்படவில்லை.	களப் பரிசோதனை மேற்கொண்ட பின்னர் கூடிய முக்கியத்துடனான மற்றும் விரைவாக திருத்த வேலைகள் மேற்கொள்ள வேண்டிய பாதைகள் மற்றும் வீதிவிளக்குகளை இனங்கண்டு திருத்த வேலை மேற்கொள்ளப்படுகின்றது என.	பொதுமக்களின் முறைப்பாடுகள் தொடர்பாக விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	2022 ஜனவரி 27 ஆந் திகதி 2264/18 இலக்கங் கொண்ட அதிவிஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டம் தொடர்பாக I ஆம் பந்தியின் பகுதி (ஈ) இல் அடங்கக் கூடிய கைத்தொழில்களுக்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்த போதிலும் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது சபையின் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரங்கள் புதுப்பிக்கப்படாத 03 நிறுவனங்கள் காணப்பட்டதுடன் அந்த நிறுவனங்களில் இருந்து ரூபா 13,200 தொகையினை சபை இழந்துள்ளது.	தச்சு வேலைத்தளம் மற்றும் நெல் ஆலைக்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் வழங்கியிருந்ததெனவும் மற்றும் கொங்கிரீட் வேலைத் தளங்களுக்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என.	வியாபார நிறுவனங்கள் சுற்றாடல் அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக் கொள்வதற்காக ஊக்குவித்து சபைக்கு அறவிடப்பட வேண்டிய கட்டணங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.2 முகாமைத்துவத் திறமையின்மை

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2013 திசெம்பர் 24 ஆந் திகதி ரூபா 40,000 தொகைக்கு வனப்பாதுகாப்பு திணைக்களத்தின் H/01/777/2013 இலக்கங் கொண்ட பலவின அனுமதிப்பத்திரம் ஒன்றின் மூலம் ஆண்டொன்றிற்கான காலப்பகுதிக்காக 04 ஹெக்டயர் காணி திண்மக் கழிவுப் பொருள் அப்புறப்படுத்துதற்காக வழங்கப்பட்டிருந்ததுடன், அதனை உரித்தாக்கும் அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்ட போதும், 2018 ஆண்டு முதல் 2024 ஆண்டு வரையான காலப்பகுதி தொடர்பாக 2024 ஆகஸ்ட் 14 திகதி ரூபா 272,800 இற்கான தொகையொன்று வன பாதுகாப்பு திணைக்களத்திற்கு செலுத்தியிருக்கும் தேவைப்பாடு கணக்காய்வில் தெளிவாக்கப்படவில்லை.	ரூபா 272,000 நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டணம் செலுத்திய பின்னர் உரித்தாக்கல் அல்லது கட்டணமற்ற விடுவிப்பு அனுமதிப்பத்திரமொன்று வழங்கப்படும் எனவும் பெரும்பாக வன அலுவலகத்திலிருந்து அறிவிக்கப்பட்டிருந்தது என.	சபைக்கு காணி உரித்தாக்குதல் தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் போது கட்டணம் செலுத்தும் தேவைப்பாடு தொடர்பாக விளக்கப்பட வேண்டும்.
(ஆ)	நிறைவேற்றப்பட்ட நிர்மாண வேலைகள் தொடர்பாக மிகையாக செலுத்தப்பட்டிருந்த தொகை 10 வீத தடுத்துவைத்தல் பணத்திலிருந்து கழித்து பலவின வைப்புக்களின் கீழ் கூட்டுப்பெறுமதி ரூபா 849,553 இற்கான தொகையொன்று வைப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் அந்தப் பணம் குறிப்பிட்ட நிர்மாண வேலை மீள்பரிசோதனை செய்து சரிசெய்வதற்கு அல்லது சபை வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	செயற்திட்டங்களுக்குரிய அறவிடப்பட வேண்டிய தொகை அறவீடு செய்த பின்னர் மீதித் தொகை முறையான செய்முறை ஒன்றின் கீழ் விடுவிப்பதற்கு அல்லது சபையின் வருமானத்திற்கு எடுக்கப்படும் என.	தடுத்து வைத்தல் பணம் குறிப்பிட்ட நிர்மாண வேலைகளின் வழுக்களை சரி செய்தவதற்கு அல்லது சபையின் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.3 விளைவற்ற ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2019 ஆண்டு ரூபா 18 மில்லியன் தொகை செலவிடப்பட்டு அரசாங்கச் செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த தற்போது ஆக்கபூர்வமான பொருளாதார அலுவல் ஒன்றிற்கு பயன்படுத்தப்படாத லுனுகம்வெஹெர பஸ் நிலைய கட்டித்தில் சிற்றுண்டிச்சாலை ஒன்று நடாத்திச் செல்வதற்காக பிரதேச சபைக்கு பாவணை உரிமை சாட்டுதல்	உடன்படிக்கையை இரத்துச் செய்து குறிப்பிட்ட தரப்பினருக்கு உரித்தாக்கும் படி மேற்கொள்ளப்பட்ட வேண்டுதலுக்கு தேவையான அலுவல்கள் மேற்கொள்ளப்படாமையால் அறுதியான பதிலொன்று கிடைக்கும் வரை கட்டிடத்திற்கான பராமரிக்கும்	லுனுகம்வெஹெர பஸ் நிலையம் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டவாறு குறிப்பிட்ட குறிக்கோளுக்காக பயன்படுத்துவதற்கு அல்லது மீண்டும் திருப்பி ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	தொடர்பாக சபை மற்றும் தென்மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையிடையே புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று 2022 திசெம்பர் 29 திகதி கையொப்பமிடப்பட்டிருந்த போதிலும், அந்த உடன்படிக்கை செயற்படுத்தப்படும் நிச்சயிக்கப்பட்ட காலமொன்று குறிப்பிடப்பட்டிருக்காததுடன் கட்டிடத்தின் பல்வேறு செலவுகளுக்காக ரூபா 53,062 தொகை சபையினால் மேற்கொண்டிருந்த போதிலும் 2025 ஜனவரி 08 திகதி கணக்காய்வு சந்தர்ப்பங்களில் 03 வருடங்கள் கடந்திருந்த போதிலும் சபையினால் பஸ் நிலையத்தில் சிற்றுண்டிச்சாலை ஒன்று நடாத்தியிருக்காமையால் குறிப்பிட்ட குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்காததுடன் அரச செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த லுனுகம்வெஹெர பஸ் நிலையம் நிர்மாணிக்கப்பட்டு 07 வருடங்கள் மிகைத்திருந்த போதிலும் அது ஒரு கைவிடப்பட்டிருந்த கட்டிடமொன்றாக மாறியிருந்தது.	செலவுகள் மேற்கொள்ள நேரிட்டிருந்தது என.	
(ஆ)	தென் மாகாண அபிவிருத்தி திட்டம் - 2018 கீழ் சமூக நீர் வழங்கள் செயற்திட்டமொன்றின் மூலம் பொதுமக்களுக்கு நீர் வினியோகித்தல் மற்றும் பயிர்செய்கைக்காக பயன்படுத்தும் குறிக்கோளுடன் லுனுகம்வெஹெர பிரதேச சபையின் முன்பக்கத்தில் குழாய் கிணறொன்று மற்றும் தாங்கு உபகரணத்துடன் உடன் நீர்தொட்டியொன்று நிர்மாணிப்பதற்கு ரூபா 1.59 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், குறிப்பிட்ட செயற்திட்டம் 02 வருடங்களுக்கு முன்னரிருந்து செயற்படாது காணப்படுவதுடன் ரூபா 733,450 தொகை பெறுமதியான நீர் மோட்டார் பௌதீக ரீதியாக சபை வளாகத்தில் காணப்படாததுடன் 10,000 லீற்றர் கொள்ளளவு கொண்ட நீர் தொட்டியின் அடிப்பகுதியில் நீர்குழாய் வெடிப்படைந்து இருந்ததுடன் குறிப்பிட்ட செயற்திட்டம் எதிர்பார்த்த குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு முடியாமல் இருந்தது.	குறிப்பிட்ட நீர் செயற்திட்டத்தை மீண்டும் செயற்படு மட்டத்திற்கு நெருங்குவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் நீர் மோட்டார் திருத்த வேலைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள நிறுவனத்தில் இருந்து மீண்டும் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	சமூக நீர் செயற்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகளில் எதிர்பார்த்த நலன்களை பெற்றுக் கொள்ள வேண்டும்.

3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சபைக்கு சொந்தமான 03 வாகனங்கள் மற்றும் சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 161 ஏக்கர் 1 ரூட் 33.70 பர்சஸ் அளவான 107 காணிகள் சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	03 வாகனங்களின் உரிமை இதுவரை உரித்தாக்கியிருக்கவில்லை எனவும் காணிகளை உரித்தாக்கும் அலுவல்களுக்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என.	சபைக்கு சொந்தமா 03 வாகனங்கள் அனுபவிக்கின்ற 107 காணிகளுக்கான சட்டரீதியான உரிமையை உரித்தாக்குதல் நிச்சயிக்கப்பட்ட காலவரையறை ஒன்றினுள் மேற்கொள்ள வேண்டும்.
(ஆ)	2007 மார்ச் 19 ஆம் திகதிய தபபா/15 இலக்கங் கொண்ட தென்மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் அறிவுரைக் கடிதத்தின் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு சொந்தமான அனைத்து ஆதனங்களுக்கும் அங்கீகாரமின்றி நுழைவதற்கு முடியாதவாறு எல்லைவேலிகள் போடுவதற்கும் மற்றும் சிக்கல் தன்மையுடன் காணப்படுகின்ற காணிகளை மீண்டும் நில அளவை செய்து சரி செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் 2023 ஆண்டின் காணி கணிப்பீட்டு அறிக்கையின் படி சபையினால் அவ்வாறு செயற்பட்டிருக்காத 71 சந்தர்ப்பங்கள் காணப்பட்டது.	பொதுக் காணி பட்டியலில் காணப்பட்ட காணிகளை உரித்தாக்களுக்குரிய சட்ட ரீதியான அலுவல்கள் முடிவடைந்த பின்னர் எல்லை வேலிகள் போடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என.	சபைக்குச் சொந்தமான காணிகள் எல்லைவேலிகள் போடப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும்.
(இ)	லுனுகம்வெஹெர பிரதேச செயலாளரின் 2002 மே 24 ஆந் திகதிய மற்றும் லு/இச/3/3/64 இலக்கங் கொண்ட கடிதத்தின் படி தகனகூடமொன்று நிர்மாணிப்பதற்காக வீரவெல துருசெவன முற்பகுதியில் அமைந்துள்ள 08 ஏக்கர் காணியில் 02 ஏக்கர் காணி சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக தொடர்நடவடிக்கை எடுத்தல் அல்லது தற்போது உரித்தாக்கல் மட்டம் தொடர்பாக தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	காணியின் எல்லைகள் தொடர்பாக சிக்கல் ஒன்று காணப்படுவதனால் அது தொடர்பாக லுனுகம்வெஹெர பிரதேச காணி பயன்பாட்டு குழுவுக்கு முன்மொழிவொன்றென சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என.	சபைக்கு சொந்தமான காணிகளின் உரிமையை மற்றும் பாதுகாப்பு உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

3.5 மனிதவள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சபையின் 05 பதவிகள் தொடர்பாக 09 ஊழியர்களுக்கான மிகையொன்று அவதானிக்கப்பட்டது.	இரண்டாம் தரப் பகுதிகளுக்குரிய அங்கீகாரம் வழங்கள் இச் சந்தர்ப்பத்தில் மேற்கொள்ள முடியாதென உள்ளூராட்சி ஆணையாளர் அறிவித்திருந்தார் என.	சபையின் பதவியணியினர் தேவைப்பாடுகள் தொடர்பாக மீளாய்வாண்டு மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஆ)	2001 ஆகஸ்ட் 22 திகதிய 18/2001 இலக்கங் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் படி 5 வருடங்களை மிகைக்கின்ற ஒரே சேவை நிலையத்தின் சேவையாற்றியுள்ள அனைத்து உத்தியோகத்தர்களும் வேறு சேவை நிலையங்களில் சேவையாற்றுவதற்காக இடமளிப்பதற்காக இடமாற்றம் வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும் சபையில் சேவையாற்றும் 08 ஊழியர் உத்தியோகத்தர்கள் 06 வருடங்கள் முதல் 25 வருடங்கள் வரையான காலப்பகுதியொன்றில் சபையில் கடமையாற்றி வருகின்றமை அவதானிக்கப்பட்டது,	2025 ஆண்டில் வருடாந்த இடமாற்றத்திற்காக விண்ணப்பிக்கப்பட்டுள்ளது என.	குறிப்பிட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் 05 வருடங்களை மிகைத்துள்ள உத்தியோகத்தர் வேறு சேவையிடங்களுக்கு மாற்றப்பட வேண்டும்.

4 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
சபையின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் அடிப்படையில் நிறுவனத்தின் செயலாற்றுகை சுட்டி 15 இன் கீழ் துணைச் சுட்டிகள் 24 மூலம் 05 சுட்டிகள் தொடர்பாக உண்மையான முடிவுற்ற எண்ணிக்கை 50 சதவீதத்தை விட குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன், வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தின் படி 2024 திசெம்பர் 31 திகதியளவில் மதிப்பீட்டுத் தொகை ரூபா 66.78 மில்லியன் தொகைக்கான 09 செயற்திட்டங்கள் சபையினால் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.	அடுத்த ஆண்டுகளின் போது இலகுவாக நெருங்கக் கூடிய வகையில் சுட்டிகள் தொடர்பாக கூடிய கவனம் செலுத்தப்படும் என.	இலக்காகிய அபிவிருத்தித் திட்டங்களுக்காக திட்டமிடுவதற்கும் அவற்றை செயற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டிற்கான 05 வருமான விடயங்களில் பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகள் இடையே கூட்டுத்தொகை ரூபா 158.25 மில்லியனுக்கான கணிசமான பிரதிகூலமான முரண்கள் அவதானிக்கப்பட்டதுடன் அவை 24 சதவீதம் முதல் 91 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான நிதிக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.	அடுத்த ஆண்டிற்காக பாதீடு தயாரிக்கும் போது மிகவும் ஆக்கபூர்வமாக தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என.	முரண்களை குறைத்துக் கொள்வதற்கும், திட்டமிடலை முறைப்படுத்துவதற்கும், வருமானம் சேகரித்தலை செயற்திறனாக்குதலும் மேற்கொள்ளப்பட வேண்டும் எடுக்வேண்டும்.
(ஆ)	சபையினால் 2024 ஆண்டிற்காக மூலதனப் பெறுகைகள் என ரூபா 162.83 மில்லியன் தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அது உள்ளவாறான பெறுவனவின் 12 மடங்காக காணப்பட்டதுடன் முன்னைய 02 வருடங்களின் மதிப்பிடப்பட்ட பெறுவனவுகளுக்கு ஒப்பாக பாரிய தொகையொன்று மதிப்பீட்டில் உட்படுத்தப்பட்டிருந்த காரணத்தினால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்த முடியாமல் இருப்பதற்கான காரணமாக இருந்தது.	அடுத்த ஆண்டிற்காக பாதீடு தயாரிக்கும் போது ஆக்கபூர்வமாக தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என.	மதிப்பீடுகள் தயாரிக்கும் போது, வழமையல்லாத முரண்களை குறைத்துக் கொள்ள வேண்டும்.

4.3 சுற்றாடல் சிக்கல்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையத்தின் குப்பை முகாமைத்துவத்திற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தின் நிபந்தனை இலக்கம் 03 இன் படி திண்மக் கழிவுப்பொருள்களில் காணப்படுகின்ற பிளாஸ்டிக், பொலிதீன், கடதாசி, கண்ணாடி மற்றும் இரும்பு வெவ்வேறாக வகைப்படுத்தி மீள்சுழற்சிக்காக உரிய நிறுவனத்திற்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு அனுப்பப்படும் வரை பொருத்தமான இடமொன்றில் காற்றின்	நிலையத்தில் சேகரிக்கப்படுகின்ற வெவ்வேறாக களஞ்சியப்படுத்தப்படுகின்றது மற்றும் டெங்கு தடுப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்கு ஒத்த நிகழ்வாக சேகரிக்கப்படுகின்ற குப்பைகளை களஞ்சியப்படுத்துவதற்கு போதியளவு இடவசதிகள் காணப்படவில்லை என.	திண்மக் கழிவுப் பொருளை அப்புறப்படுத்துவதற்காக முறைசார் வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும்.

மூலம் எடுத்துச்செல்ல முடியாதவாறு மற்றும் மழைநீருடன் கலக்க முடியாதவாறு முறைப்பிரகாரம் களஞ்சியப்படுத்தப்பட வேண்டிய போதிலும் சபை அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதே போல் சேதனப் பசளை உற்பத்தி மற்றும் விற்பனை அலுவல்கள் மேற்கொள்ளும் போது சரியான உள்ளகக் கட்டுப்பாட்டு முறையொன்று பேணிச் செல்ல வேண்டும்.		

4.4 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோளை அடைந்து கொள்வதற்காக 03 செயலாற்றுகை சுட்டிகளுக்குரிய 04 இலக்குகள் வெற்றிகர சுட்டிகளை நெருங்கும் சதவீதம் 0.8 சதவீதம் முதல் 27 சதவீதம் வரையான வீச்சில் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.	சுட்டிகளின் அபிவிருத்தியை கணிக்கப்பட்டது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாகவே ஆகும்.	நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக ஆரம்பம் முதல் இது வரை முன்னேற்றம் சரியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.